முதலாவது கூடுதல் மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், நாகர்கோவில்

நாள். 15.10.2025

O.S. 252/2016

வா.சா.2 - முருகன்

முதல் விசாரணை.

நான் அகஸ்தீஸ்வரம் தாலுகா அலுவலகத்தில் மண்டல துணை வட்டாசியராக 18.08.2025 முதல் பணியாற்றி வருகிறேன். இந்த வழக்கில் சாட்சியம் அளிக்க அழைப்பானை வந்தது. அழைப்பாணையில் கேட்கப்பட்ட ஆவணங்களை சமர்பிக்கிறேன்.

| | | | |
|---|---|---|---|
| வா.சா.ஆ.21 | | சர்வே எண் 547/3 ற்கான SLR | சான்றிட்ட நகல் |
| வா.சா.ஆ.22 | | புல எண்ணிற்கான ஒப்புமைச் சான்று | அசல் |
| வா.சா.ஆ.23 | | சர்வே எண் 547/3 ற்கான SLR | சான்றிட்ட நகல் |
| வா.சா.ஆ.24 | | அ பதிவேடு | சான்றிட்ட நகல் |
| வா.சா.ஆ.25 | | கணினி பட்டா சர்வே எண் 547/3 | இணைய வழி நகல் |
| வா.சா.ஆ.26 | | சர்வே எண் 547 ற்கான புல வரைபடம் | சான்றிட்ட நகல் |
| வா.சா.ஆ.27 | | சர்வே எண் 544 ற்கான புல வரைபடம் | சான்றிட்ட நகல் |
| வா.சா.ஆ.28 | | சர்வே எண் 544 ற்கான அ பதிவேடு | சான்றிட்ட நகல் |

வா.சா.ஆ. 17, 19 ல் பத்மநாடார் மக்கள் சுப்பிரமணியன், சிதம்பரம், முத்துச்சாமி ஆகியோர் பெயர் சர்வே எண் 547/3 ல் உள்ளது. வா.சா.ஆ 18 ஆவணத்தில் புதிய சர்வே எண் 547/3 பகுதிக்கு பழைய சர்வே எண் 1101 என்று சான்று உள்ளது. வா.சா.ஆ.20 ல் பட்டா எண் 3189 படி பத்மநாடார் மக்கள் சுப்பிரமணியன், சிதம்பரம், முத்துச்சாமி. தனிஸ்லாஸ் மனைவி எலிசபெத் மேரி பெயரில் கூட்டு பட்டா உள்ளது.

தங்கநாடாச்சியின் மக்கள் ராஜகனி, கவிதா, செல்வி, சுயம்புகனி ஆகியோர் பெயரில் கூட்டுப் பட்டா உள்ளது. மேற்படி பெயர்கள் அ பதிவேட்டிலோ SLR பதிவேட்டிலோ துலங்கவில்லை என்றால் சரி. கூட்டுப் பட்டாவில் சுடலையாடும் பெருமாள் நாடார், அன்னபாக்கியம், தங்கநாடாச்சி ஆகியோர் பெயர்கள் இல்லை. மேற்படி பெயர்கள் சுடலையாடும் பெருமாள் நாடார், அன்னபாக்கியம், தங்கநாடாச்சி அ பதிவேட்டிலோ SLR பதிவேட்டிலோ துலங்கவில்லை என்றால் சரி.

சர்வே எண் 544 நிலமானது தேசிய நெடுஞ்சாலை என்று அ பதிவேட்டில் உள்ளது. நான் வழக்கு ஸ்தலத்தை நேரில் பார்வையிட்டேன்.

பிரதிவாதி தரப்பு குறுக்கு விசாரணை

தேசியநெடுஞ்சாலை என்று வகைப்பாடு செய்வதற்கு முன்பு அந்த இடம் எவ்வாறு இருந்தது என்று எனக்குத் தெரியாது. புல ஒப்புமைச் சான்று 08.10.2025 ல் தயாரிக்கப்பட்டது.கூட்டுப் பட்டாவில் பிரதிவாதிகளின் பெயர் உள்ளது.

SLR எப்போது தயாரிக்கப்பட்டது என்று எனக்குத் தெரியாது. SLR ஆவணத்தில் குறிப்பிட்டுள்ள நபர்களுக்கு எவ்வாறு சொத்து பாத்தியம் என்பது அந்த ஆவணத்தில் துலங்காது என்றால் சரி. ஆவண எண் 240/1982 ஆவணத்தை நான் பார்த்துள்ளேனா என்றால் இல்லை. தாவா இடத்தில் வாதியின் வீடு என்று அக்கம் பக்கத்தில் உள்ள பொதுமக்களிடம் நாங்கள் விசாரித்து தெரிந்து கொண்டோம். பொது மக்கள் பெயரை நாங்கள் விசாரிக்கமாட்டோம். நான் இன்று தாக்கல் செய்துள்ள ஆவணங்கள் அனைத்தும் எனக்கு நேரடியாக தெரியாது என்றால் சரி. நான் ஆவணத்தின் அடிப்படையில் சாட்சியம் அளிக்கிறேன். வழக்கு தரப்பினர்களின் முன்னோர்கள் பற்றி எனக்குத் தெரியாது.

SLR ல் பிரதிவாதிகள் மற்றும் அவர்கள் முன்னோர்கள் பெயர் இல்லாத காரணத்தால் அவர்களுக்கு பாத்தியம் இல்லை என்று சொல்ல முடியாது என்றால் சரிதான்.